**S.T.C. No.86/2024**

**Dated: 09.12.2024**

**PW: 1** ராமச்சந்திரன்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

<u>**குறுக்கு விசாரணை :**</u>

1. உங்கள் மீது பல்வேறு காவல் நிலையங்களில் பல்வேறு குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. **(சாட்சி தற்போது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகள் முடிந்து விட்டது என கூறுகிறார்.)** தோராயமாக 15 குற்றவழக்குகள பதிவு செய்யபபடடிருக்குமா என்றால் சரியல்ல. நீங்கள் ஒரு அரசியல் கட்சியில் பேச்சாளராக இருந்து வருகிறிர்கள் என்றால் சரிதான். நீங்கள் என்ன தொழில் செய்து வருகிறிர்கள் என்பதை உங்களது புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) நீங்கள் வட்டி தொழில் செய்து வருகிறிர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் எதிரிக்கு எந்த இடத்தில் வைத்து பணம் கொடுத்தீர்கள் என்ற விபரம் உங்களது மனுவில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். பணம் கொடுக்கும் போது யார்யார் இருந்தாரகள் என்ற விபரமும் உங்களது புகார்மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து செக்யூரிட்டிக்காக காசோலையை தவிர வேறு ஆவணம் பெறவிலலை என்றால் இடத்தின் பத்திரம் கொடுத்தார். இந்த விபரத்தை உங்களது புகார்மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) பணம் கொடுத்தது காலையா அல்லது மாலையா என்ற விபரத்தையும் உங்களது புகார்மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.எதிரிக்கு கொடுத்த பணத்தை வங்கியிலிருந்து எடுத்தீர்களா என்றால் இல்லை, ஆடு விற்று பணம் வைத்திருந்தேன். நீங்கள் கரூர் வைஸ்யா வங்கியில் கணக்கு வைத்திருக்கிறிர்கள் என்றால் சரிதான். அந்த வங்கியில் வரவுசெலவு விபரம் எதுவும் புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) வழக்கு காசோலையை நிரப்பியது யார் என்றால் ஆஜர் எதிரி தான் நிரப்பினார். தாவா காசோலையிலுள்ள பெயர், எண்ணாலும் எழுத்தாலும் எழுதப்பட்ட தொகை மற்றும் தேதி ஆகியவை எதையும் எதிரி எழுதவில்லை என்றால் சரிதான். தாவா காசோலையிலுள்ள விபரங்கள் அனைத்தும் உங்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த விபரத்தை நிருபிக்க சம்பந்தப்பட்ட காசோலையை கையெழுத்து பரிசோதகர் நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறுவதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

5) எதிரியின் கணவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் கொத்தனார் வேலை செய்து வருகிறர். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அவர் குடும்பதலைவியாக இருக்கிறார். எதிரி உங்களது குடும்ப நண்பர் என உங்களது புகார்மனுவில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் வைரமணி என்பவர் மீது S.TC 149/2024 என்ற வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறிர்கள் என்றால் சரிதான். அதேபோல் வேறு நபர்கள் மீது காசோலைகள் வழக்குகள் தாக்கல் செய்து நடத்தி வருகிறிர்களா என்றால் ஆமாம். அதேபோல் அருணாச்சலவடிவு என்பவர் மீது STC No.82/2024 என்ற வழக்கையும் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

6) மேற்படி அருணாச்சலவடிவு மீது வழக்கு காசோலை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற சொல்லி நாலாட்டின்புத்தூர் காவல்நிலையத்தில் எதிரி ஒரு புகார் மனுவினை கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எதிரிக்கு தகவல் தெரிவித்தீர்களா என்றால் ஆமாம். நீங்கள் வருமானவரி செலுத்தி வருகிறிர்களா என்றால் இல்லை.

7) வழக்கு காசோலையானது மேற்படி அருணாச்சலவடிவு மூலமாக எதிரி ஒரு தனியார் நிதி நிறுவனத்துக்கு கொடுத்திருந்தார் என்றாலும் நீங்களும் அருணாச்சலவடிவும் சேர்ந்து தாவா காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளீர்கள் என்றாலும் சரியல்ல. உங்களை யாரென்றே எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஒரே ஆண்டில் பல்வேறு நபர்களுக்கு பணம் கொடுக்கும் அளவுக்கு உங்களுக்கு போதிய வருமானமோ வசதி வாய்ப்போ இல்லை என்றால் சரியல்ல. அதனால்தான் வருமானவரி எதையும் நீங்கள் செலுததவில்லை என்றால் சரியல்ல.

8) வங்கிகணக்கின் வரவு செலவு விபரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தையும் உண்மையல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

.

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.